Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, 19 AUGUST 2024

திங்கட்கிழமை ஆகஸ்ட் 19, 2024 | ஒளி: 10 கதிர் 031 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE



நிகழ் காலத்தை வாழ் - கடந்த காலத்தை நினைத்து அந்த நினைவுகளில் மூழ்கி போகாதே. எதிர்காலத்தை பற்றி நினைத்து கனவு காணவும் செய்யாதே. உனது மனதை நிகழ் காத்தில் கவனம் செலுத்த வைத்து, அதை வாழ்: தர்ம போதனை



# இ.தொ.கா. ஆதரவு ரணிலுக்கு

■ ஆ.ரமேஷ்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சுயேச்சை வேட்பாளரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை, கொட்டக்கலை காங்கிரஸ் தொழிலாளர் நிறுவன பொது மக்கள் கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை (21) கூடியது. நீண்ட நேர வாத பிரதி வாதங்களுக்கு மத்தியில், ஏகமனதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான் மற்றும் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஆறுமுகம் ஜீவன் தொண்டமான் ஆகியோரின் தலைமையில் இந்த தேசிய சபைக் கூட்டம் வழிபாட்டுக்குப் பின்னர் பிற்பகல் 12.40 மணி அளவில் இடம்பெற்றது.

இதன்போது பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரின் பெயர்கள் சபைக்கு அறிவிக்கப்பட்டன.

இவர்களில் யாரை ஆதரிக்க இ.தொ. கா தேசிய சபை முடிவெடுக்கப் போகிறது தொடர்பில் சபை உறுப்பினர்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டது. இதன் போது நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களை ஆதரிப்பதாகத் தேசிய சபை உறுப்பினர்கள் ஏகமனதாக முடிவு செய்தனர்.

தொடர்ச்சி P2

# லிட்டில்ஜோன் வருகிறார்



சமுத்திரங்கள் மற்றும் சர்வதேச சுற்றுச்சூழல் மற்றும் விஞ்ஞான விவகாரங்களுக்கான பதில் உதவி இராஜாங்க செயலாளர் ஜெனிபர் ஆர். லிட்டில்ஜோன் ஆகஸ்ட் 31 வரை இலங்கையில் தங்கியிருப்பார் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த பயணத்தின் போது அவர் இந்தியா மற்றும் மாலைத்தீவுகளுக்கும் செல்லவுள்ளார்.

தொடர்ச்சி P2



# “தேர்தல் பிரசாரத்தில் தேசி கொடி வேண்டாம்”

தேர்தல் பிரசாரங்களுக்கு தேசிய கொடியை பயன்படுத்தினால் சட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் இது தொடருமானால் இன்னும் சில நாட்களில் தேசிய கீதம் கட்சியின் பாடலாக மாறும் என்றும் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

இவ்வருட ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொழும்பில் நடைபெற்ற இந்த செயலமர்வு பெப்ரல் அமைப்பின் அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க மேலும் தெரிவிக்கையில்,

அரசியல்வாதிகளைப் பார்க்கிறோம் அவர்கள் இல்லாமல் தேர்தல் இல்லை. தேசியக் கொடியின் பெருமை இன்று பள்ளத்துக்குப் போய்விட்டது. எனவே, தேர்தல் பிரசாரங்களுக்கு தேசியக் கொடியை பயன்படுத்த வேண்டாம்.

இப்போது கிரிக்கெட் போட்டிகளில், தேசியக் கொடியை சுற்றிக் கொண்டு, ஒரு கையில் மது போத்தலை வைத்துக் கொண்டு நடனமாடுவதால், அரசியல் தத்துவம் இல்லை.

நாட்டின் அபிவிருத்திப் பணிகளை நாங்கள் வேண்டாம் என்று கூறவில்லை என்றார்.

# ஜப்பானிலிருந்து இந்தியா வரை பொருளாதார ஒத்துழைப்பு

## இலங்கையின் நோக்கம் என்கிறார் ஜனாதிபதி



‘நோக்கம்’ பிரகடனம், இந்திய இலங்கைக்கு இடையிலான வரலாற்று ஒத்துழைப்பை நினைவூட்டுவதுடன் நெருக்கமான எதிர்கால உறவுகளுக்கும் வழி வகுக்கும்.

உலகின் தெற்கு நாடுகளை வலுப்படுத்துவதற்கான இந்தியாவின் முயற்சிகள் பாராட்டுக்குரியவை ‘உலகின் தெற்கு நாடுகளின் குரல்’ மாநாட்டின் மூன்றாவது அமர்வில் ஜனாதிபதி தெரிவிப்பு.

தொடர்ச்சி P2

# 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்

களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய, புளத்சிங்கள மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான, எஹெலியகொட, எலபாத்த ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை, மாத்தறை, மாவட்டங்களின் சில பிரதேச செயலக பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# “21/4 தாக்குதலின் உண்மை நிலையை வெளிப்படுத்துவோம்”

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக மக்களின் எதிர்பார்த்துள்ளது போல உண்மைத் தன்மையை வெளிக் கொணர்வதற்குத் தாம் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் அனைவரும் தயாராக இருக்கிறோம். இதற்கான தெளிவான வேலைத் திட்டங்கள் என்னிடம் இருக்கின்றன. இது தொடர்பான விடயங்கள் பாராளுமன்றத்தில் கூட சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முறையான விசாரணைகள் வெளிப்படைத்தன்மையோடு இடம் பெற்றதா என்பது குறித்தே இந்த நாட்டில் உள்ள கத்தோலிக்கர்களுக்கும் ஒட்டுமொத்த நாட்டு மக்களும் எதிர்பார்த்திருக்கின்றனர்.

தொடர்ச்சி P2

# பிரசாரத்தை ஆரம்பித்தார் தமிழ் பொது வேட்பாளர்

■ எம் . றொசாந்த்

தமிழ் பொது வேட்பாளரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் நல்லூர் ஆலயத்திற்கு ஞாயிற்றுக்கிழமை (18) காலை சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

தொடர்ச்சி P2



# 3 சிறுமிகள் துஷ்பிரயோகம்: ஆசிரியர் உட்பட 3 பேர் கைது

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, ஏறாவூர், காத்தான்குடி, ஆகிய பொலிஸ் பிரிவுகளில் கடந்த இரு வாரங்களில் பாடசாலை சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆசிரியர் ஒருவரையும், இரு சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் இரு இளைஞர்களைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



# “தமிழ் மக்கள் ஆதரிக்கின்றவர் ஜனாதிபதியாக வேண்டும்

■ வ.சக்தி

பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இம்முறை பல அபிவிருத்தி திட்டங்களை என்னால் மேற்கொள்ள முடிந்துள்ளது. வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ஆதரிக்கின்ற ஒருவர்தான் இந்த நாட்டிலே ஜனாதிபதியாக வரவேண்டும்.

அவ்வாறான சூழல் வருகின்றபோது தான் தமிழ் மக்களின் அரசியல் சார்ந்த விடயங்களை முன்னெடுக்க முடியும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இ.தொ.கா. ஆதரவு ரணிலுக்கு

அதே நேரத்தில், தாம் ஆதரவளிக்கும் ஜனாதிபதி வேட்பாளரான ரணில் விக்ரமசிங்க அவர்களுடன் மலையக மக்களின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் முன்னேற்ற செயற்பாடுகள் தொடர்பான புரிந்து உணர்வு ஒப்பந்தம் ஒன்றை விரைவில் கைச்சாத்திட்டுக் கொள்ளலாம் என தேசிய சபை உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தைக் கட்சியின் மேல்மட்டம் ஏற்றுக் கொண்டது என கட்சித் தலைவர் செந்தில் தொண்டமான் ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

மேலும் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1700 ரூபாய் சம்பளம் தொடர்பான வர்த்தமானி ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அதைத் தமிழில் வெளியிட நடவடிக்கை எடுப்பீர்களா என கேட்டபோது பதில் வழங்கிய செந்தில் தொண்டமான் நடவடிக்கை எடுக்கப்படும் என மிக அவசர அவசரமாகப் பதில் வழங்கினார்

## 3 சிறுமிகள் துஷ்பிரயோகம்: ஆசிரியர் உட்பட 3 பேர் கைது

இந்நிலையில், 4 வயது சிறுவனைச் சித்திரவதை செய்த பாடசாலை ஆசிரியர் ஒருவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்திலுள்ள பிரதேச பாடசாலை ஒன்றில் கல்விகற்றுவரும் 16 வயதுடைய மாணவியைக் கடந்த 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆலயம் ஒன்றில் தரிசனத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிறுமியை அதே பாடசாலையில் கல்வி கற்பித்துவரும் 44 வயதுடைய ஆசிரியர் சிறுமியைத் தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு அங்கிருந்து மட்டுநகர் பகுதிக்கு பிரயாணித்துள்ளார்.

இதனை கண்டுகொண்ட இளைஞர்கள் அவர்களை பின் தொடர்ந்து வந்து நகர்ப்பகுதியில் வைத்துப் பிடித்து நைப்புடைப்பு செய்த நிலையில் அவர் அந்த அங்கிருந்து சிறுமியுடன் தப்பி ஓடியுள்ளார். இது தொடர்பாகச் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் குறித்த ஆசிரியருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து, குறித்த ஆசிரியரை கடந்த வியாழக்கிழமை (15) திகதி ஏறாவூர் பொலிஸார் கைது ஏறாவூர் நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலைப்படுத்தினர். அவரை 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அதேவேளை, காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசம் ஒன்றில் 15 வயது சிறுமியை 19 வயதுடைய இளைஞன் காதலித்து வந்துள்ளார். அச்சிறுமியைக் கூட்டிச் சென்று ஆயித்தியமலை பிரதேசத்தில் வீடொன்றில் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்து மறைத்து வைத்திருந்த நிலையில் அவரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய நிலையில் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவ்வாறே கஞுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் 15 சிறுமியைக் காதலித்து வந்த 19 வயது இளைஞன் ஒருவர் குறித்த சிறுமியின் வீட்டிற்கு இரவில் மோட்டார் சைக்கிளில் சென்று அதனை மறைவிடம் ஒன்றில் மறைத்து வைத்துவிட்டு மதிலால் ஏறி வீட்டிற்குச் சென்று சிறுமியுடன் காதலில் ஈடுபட்டு, திரும்பி வந்து சென்றுவரும் நிலையில் அதனை அவதானித்த இனம் தெரியாதோர் அவர் வழமைபோல மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டு காதலியிடம் மதிலால் சென்ற திரும்பி வரும் போது, மோட்டார் சைக்கிள் தீக்கிரையாக்கியுள்ளனர்.

இந்த மோட்டார் சைக்கிள் தீக்கிரை தொடர்பான விசாரணையில் குறித்த இளைஞன் காதலியான 15 வயது சிறுமியின் வீட்டிற்கு இரவில் களவாகச் சென்று வருவதாக அறிந்ததையடுத்து, 15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், ஆங்கில மொழி மூலமான தனியார் பாடசாலை ஒன்றில் ஆரம்ப பிரிவில் கல்வி கற்று வரும் 4 வயது சிறுவன் ஒருவன் வாயில் ஏற்பட்ட காயம் காரணமாகப் பாடசாலைக்குச் செல்ல முடியாத மருத்துவ விடுமுறையில் வீட்டில் இருந்துள்ளார். இதன் பின்னர் கடந்த வாரம் பாடசாலைக்குச் சென்ற நிலையில், அந்த மாணவனுக்கு அங்குக் கற்பித்துவரும் ஆசிரியர் ஒருவர் குறித்த நேரப் பகுதியில் அந்த தவணைக்கான பாடத்திட்டத்தை முடிக்கவேண்டும் என தெரிவித்து மாணவனைக் குறித்த சில நேரத்தில் அந்த பாடங்களை எழுத வைத்துள்ளார்

மாணவன் கை நோகின்றது என தெரிவித்த போதும், அவனை வற்புறுத்திய நிலையில், இரு கைகளும் வேதனைக்கு மத்தியில் அதனை எழுதி வீட்டிற்குச் சென்று தனக்கு நடந்த கொடூரமான செயலை தெரிவித்ததையடுத்து, அந்த ஆசிரியருக்கு எதிராகப் பாதிக்கப்பட்ட சிறுவனின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

## “21/4 தாக்குதலின் உண்மை நிலையை வெளிப்படுத்துவோம்”

இதன் உண்மைத்தன்மை வெளிப்படுத்தப்பட்டதா என்பது குறித்தும் சிக்கல் காணப்படுகின்றன. எனவே, இது தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டு, கர்தினல் உள்ளிட்ட கத்தோலிக்க பேரவைக்கு எங்கனமும் தெளிவுபடுத்துவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவ்வாறே, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான பின்னணி மற்றும் அதன் உண்மைத்தன்மை என்பனவற்றை எந்தவித பேதமும் இன்றி கண்டறிந்து, அதனுடன் தொடர்புடைய அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகபட்ச தண்டனையைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது வாக்குறுதியளித்தார்.

2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக ஆசிகளை பெற்றுக் கொள்ளும் முகமாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கொழும்பு ஆயர் இல்லத்திற்கு ஞாயிற்றுக்கிழமை (18) விஜயம் செய்தார்.

இங்கு, பேரருட்திரு மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, அருட்திரு மெக்ஸ்வெல் சில்வா, அருட்திரு ஜே.டி. அந்தனி ஜயகொடி, அருட்திரு அன்டன் ரஞ்சித், அருட்திரு சிறில் காமினி மற்றும் அருட்திரு இந்திக ஜோய் ஆகியோரைச் சந்தித்து எதிர்க்கட்சித் தலைவர் ஆசிகளைப் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள மழையுடனான வானிலையினால், 360 குடும்பங்களைச் சேர்ந்த 1,404 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்திலேயே அதிகளவிலானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய களுத்துறை மாவட்டத்தில் 764 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் 636 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காலி மாவட்டத்தில் மழையுடனான வானிலையினால் நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, நாட்டின் பல பகுதிகளில் 75 மில்லிமீட்டர் அளவிலான பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா மாவட்டங்களின் சில இடங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அத்துடன், மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 75 மில்லி மீற்றர் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதுடன், மின்னல் தாக்கங்கள் தொடர்பில் முன்னெச்சரிக்கையுடன் செயற்படுமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## பிரசாரத்தை ஆரம்பித்தார் தமிழ் பொது வேட்பாளர்

தந்தை செல்வா நினைவு சதுக்கத்திற்கு காலையில் சென்ற பொது வேட்பாளர் உள்ளிட்ட குழுவினர் தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர். இதனைத் தொடர்ந்து நல்லூர் ஆலயத்திற்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டதுடன், நல்லை ஆதீன குரு முதல்வரை சந்தித்து ஆசி பெற்றனர். தொடர்ந்து ஏனைய மத ஸ்தலங்களுக்கு சென்று வழிபட்டதுடன், ஏனைய மத தலைவர்களிடமும் ஆசி பெற்றனர்.

## லிட்டில்ஜோன் வருகிறார்

“அவரது வருகையின் போது, இயற்கை மற்றும் கடல் பாதுகாப்பு, பிளாஸ்டிக் மற்றும் காற்று மாசுபாடு, காலநிலை நெருக்கடி, காடழிப்பு, இயற்கைக்கு எதிரான குற்றங்கள், சிவில் மற்றும் வணிக நடவடிக்கைகள், விஞ்ஞானம்,தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் பெண்கள் மற்றும் சிறுமிகளை ஊக்குவித்தல் மற்றும் நிலையான கடல்சார் பொருளாதாரம் குறித்து அவர் கலந்துரையாடுவார் என, திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆகஸ்ட் 19 முதல் 21 வரை இலங்கையில் அவர் அரசு அதிகாரிகள் மற்றும் பங்குதாரர்களை சந்திப்பதுடன், அமெரிக்காவால் ஆதரிக்கப்படும் வனவிலங்கு பாதுகாப்புத் திட்டங்களைப் பார்வையிடுதல் ஹைட்ரோகிராஃபி மற்றும் காலநிலை மாற்றம் போன்ற முன்னுரிமைப் பகுதிகளில் அமெரிக்க நிபுணர்களுடன் இலங்கையர்களை இணைப்பதற்கான வாய்ப்புகளை ஆராய்வார் என திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## “தமிழ் மக்கள் ஆதரிக்கின்றவர் ஜனாதிபதியாக வேண்டும்

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி சாயி சிறுவர் விளையாட்டு விழா களுவாஞ்சிகுடியில் சனிக்கிழமை (17) மாலை நடைபெற்றது. இதன்போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்

நாம் அபிவிருத்தி சார்ந்த விடயங்களையும் நாம் முன்னெடுக்க வேண்டும். எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூட உரிமையுடன் கூடிய அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும் என்றுதான் எழுதியிருந்தோம். எனவே வடக்கு கிழக்கு மக்களுக்கு நன்கு சேவை செய்பவரை நன்கு அறிந்து எமது மக்கள் தேர்வு செய்ய வேண்டும். மிக விரைவாக எமது கட்சி ஒற்றுமையாக நாம் ஒரு முடிவை அறிவிப்போம். அந்த முடிவுக்குக் கட்டுப்பட்டு எமது மக்களும் சேர்ந்து வருவார்கள் என்றால் நிச்சயமாக இப்பிரதேசத்தில் சிறந்த எதிர்காலத்தை அமைக்க முடியும் என்றார்.

## பிரபல உணவகத்தை 22 வரை மூடுமாறு நீதிமன்ற உத்தரவு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு நகரில் இயங்கி வரும் பிரபல உணவகம் சுகாதார ஒழுங்கு விதிகளை மீறிக் கழிவு நீரை வெளியில் திறந்துவிட்ட மற்றும் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற கோழி இறைச்சியை களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை தொடர்பாக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம், உணவகத்தை எதிர்வரும் 22ஆம் திகதி வரை தற்காலிகமாக மூடுமாறு ஞாயிற்றுக்கிழமை (18) உத்தரவு பிறப்பித்ததையடுத்து, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உணவகத்தை உடனடியாக மூடி சீல் வைத்தனர்.

உணவகத்தின் கழிவு நீர் வெளியேறி வீதிகளிலும் வடிகான்களிலும் தேங்கி நிற்பதுடன் அந்த பகுதியில் துர்நாற்றம் வீசி வருவதாகப் பொதுமக்கள் தொடர்ச்சியாக பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு முறைப்பாடு தெரிவித்து வந்தனர்.

குறித்த உணவகத்தை புளியந்தீவு பொதுச் சுகாதார பரிசோதகர் ஜெ.யசோதரன் தலைமையிலான பரிசோதகர்கள் முற்றுகையிட்டு சோதனை செய்தபோது, மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற கோழி இறைச்சியை களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை மற்றும் சுகாதார ஒழுங்கு விதிகளை மீறிக் கழிவு நீரை வெளியில் திறந்து விட்ட வந்துள்ளதையும் கண்டுபிடித்தனர்.

இந்த சுகாதார சீர்கேடு தொடர்பாக 1980ம் ஆண்டு 26ஆம் இலக்க உணவு சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவின் கீழ் குறித்த உணவகத்தின் உரிமையாளர் மீது பொதுச் சுகாதார பரிசோதகர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஞாயிற்றுக்கிழமை (19) வழக்கு தாக்குதல் செய்ததுடன், குறித்த உணவகத்தின் மீது கடந்த மார்ச் மாதம் 14 ம் திகதி மனித பாவனைக்குப் பொருத்தமற்ற உணவு வைத்திருந்த குற்றச்சாட்டில் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு குற்றவாளி என இனங்காணப்பட்ட தண்டப்பணம் செலுத்தினர் என நீதவானின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்து நீதவான் உடனடியாக குறித்த உணவகத்தை எதிர்வரும் 22ஆம் திகதி வரை தற்காலிகமாக மூடி சீல் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## ஜப்பானிலிருந்து இந்தியா வரை பொருளாதார ஒத்துழைப்பு

வங்காள விரிகுடா மற்றும் அதைச் சூழ உள்ள பிராந்தியங்கள் தற்போது அபிவிருத்தி மையமாக மாறி வருவதால், பிம்ஸ்டெக் (BIMSTEC) அமைப்பின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே பிம்ஸ்டெக் அமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கையானது இந்தியாவுடன் நெருக்கமான பொருளாதார ஒருங்கிணைப்புடனும், ஜப்பான் முதல் இந்தியா வரை பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கைகளை ஏற்படுத்த எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

‘உலகின் தெற்கு நாடுகளின் குரல்’ மாநாட்டின் அரச தலைவர்கள் அமர்வில் நேற்று (17) அனுராதபுரம் ஜனாதிபதி மாளிகையில் இருந்து இணையவழி மூலம் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

“நிலைபேறான எதிர்காலத்திற்கான வலுவூட்டப்பட்ட உலகின் தெற்கு நாடுகள்” என்ற தொனிப்பொருளின் கீழ் மூன்றாவது முறையாக நடைபெறும் இந்த மாநாடு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மற்றும் பல்வேறு நாடுகளின் அரச தலைவர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. உலகளாவிய தலைமைத்துவத்தில் மேற்கிற்கு இனிமேலும் ஆதிக்கம் செலுத்த முடியாத நிலையை அடைந்துள்ளதாகவும், இவ்வாறான நிலையில், உலகின் தெற்கு நாடுகளை வலுப்படுத்தும் இந்தியாவின் முயற்சிகளுக்கு இதன்போது ஜனாதிபதி பாராட்டு தெரிவித்தார்.

உலகின் தெற்கு நாடுகள் எதிர்நோக்கும் பல்வேறு சிக்கல்கள் தொடர்பில் பொதுவான ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு ‘உலகின் தெற்கு நாடுகளின் குரல்’ மாநாடு உதவும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்திய-இலங்கை உறவு குறித்து இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ‘நோக்கு’ பிரகடனம் இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று ஒத்துழைப்பை நினைவுபடுத்துவதுடன் எதிர்காலத்தில் நெருக்கமான உறவுகளுக்கு வழி வகுக்கும் என்றும் இது இறுதியில் பல்வேறு துறைகளின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான ஒருங்கிணைப்புக்கு வழிவகுக்கும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், இந்தியப் பிரதமர் மோடி மற்றும் இந்தியாவின் பெருந்தன்மையால் இலங்கை மக்கள் இரண்டு வருடங்களாக எதிர்கொண்ட சிரமங்களைக் குறைத்து வங்குரோத்து நிலையிலிருந்து மீள முடிந்ததை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, அதற்காக நன்றிகளைக் கூறினார்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவிக்கையில்,

‘உலகின் தெற்கு நாடுகளின் குரல்’ தொடர்பான மூன்றாவது இணையவழி மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளமைக்கு நன்றி. இந்தத் தொடர் உச்சி மாநாடு எமது நோக்கங்கள் குறித்த புரிதல்கள் மற்றும் ஒவ்வொருவருக்கு இடையிலான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் வாய்ப்பு கிடைக்கும்.

மேலும் உலகின் தெற்கு நாடுகள் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளில் பொதுவான நிலைப்பாட்டை எட்ட உதவும். மேற்குலகம் தொடர்ந்தும் உலகத் தலைமைத்துவத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாத நிலைக்கு வந்துள்ளது. இப்போது பிரச்சினைக்குரிய பகுதியாகவும் மேற்குலகம் மாறியுள்ளது. . உக்ரெய்னும் காசாவும் அதற்கு முக்கியமான உதாரணமாகும். இந்தச் சூழலில், உலகளாவிய தெற்கு நாடுகளை வலுப்படுத்தும் இந்தியாவின் முயற்சிகளை நாம் பாராட்ட வேண்டும்.

இலங்கை தனது பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைவதற்கு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளைக் குறிப்பிடுகிறேன். உத்தியோகபூர்வ கடன் வழங்கிய நாடுகள், சீனா எக்ஸிம் வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கியுடனும் இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கான ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

இரண்டு வருடங்களாக இலங்கை மக்கள் எதிர்கொண்ட சிரமங்களைக் குறைத்து வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்தியாவின் பெருந்தன்மையே காரணம் என்பதை இத்தருணத்தில் குறிப்பிட வேண்டும். நமது இரு நாடுகளும் ஏற்றுக்கொண்ட ‘நோக்கம்’ என்ற அறிக்கையானது, 2000 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் நமது இரு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை நினைவுபடுத்தும் அதேவேளையில், எதிர்காலத்திலும் நெருங்கிய உறவுகளைப் பேணுவதற்கான வழியைத் திறந்துள்ளது. இதனால் பல துறைகளில் நமது இரு நாடுகளுக்கும் இடையே ஆழமான பிணைப்பு ஏற்படும்.

தற்போது விரிவான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒப்பந்தத்தை எட்டுவதற்கான இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளோம். மின்சாரம், போக்குவரத்து மற்றும் தரை மார்க்க இணைப்புகள் ஆரம்பிக்கப்படும். மேலும் திருகோணமலை துறைமுக அபிவிருத்தி மற்றும் ஏனைய இணக்கம் காணப்பட்ட திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தியுள்ளோம்.

இந்த திட்டங்கள் எமது அறிவையும் தொழில்நுட்பத்தையும் மேம்படுத்துவதற்கும் இலங்கையை டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி நகர்த்துவதற்கும் உதவும். அதற்காக இந்தியா வழங்கும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

வங்காள விரிகுடா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் தற்போது அபிவிருத்தியின் மையமாக மாறி வருகிறோம். எனவே, பிம்ஸ்டெக் (BIMSTEC) அமைப்பின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. BIMSTEC சங்கத்தின் உறுப்பினர் என்ற வகையில் இலங்கை, இந்தியாவுடன் நெருக்கமான பொருளாதார ஒருங்கிணைப்புடன், ஜப்பானில் இருந்து இந்தியாவிற்கு வரையில் பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன், பிராந்தியத்தின் விரிவான பொருளாதார கூட்டினைவான (RCEP) உறுப்புரிமையை இலங்கையைப் பெற்றுக்கொள்ளவும் இலங்கை முன்வந்திருக்கிறது. வங்காள விரிகுடா பகுதி நமது பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்பதையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சி, நாகரீகங்களின் மோதல், வரலாற்றின் முடிவுகள் போன்ற கருத்துக்களால் உருவான மேற்கத்திய மேலாதிக்கத்தின் 1989இற்குப் பிந்தைய சகாப்தம் இப்போது முடிவுக்கு வருகிறது.

இந்த உச்சி மாநாடு மற்றும் இதற்கு நிகரான BRICS மற்றும் G20 குழுவின் விரிவாக்கம் என்பன உலகளாவிய தெற்கில் ஒரு பாரம்பரியத்தை விட்டுச்செல்லக்கூடிய புதிய ஒழுங்குக்கு வழி வகுக்கும். சுதந்திரம் பெற்றதில் இருந்து ஆபிரிக்க ஆசிய நாடுகளை ஒன்றிணைக்க நடவடிக்கை எடுத்துவரும் நம் அனைவருக்கும் இடையே நெருக்கமான ஒற்றுமையைக் கொண்டு வருவதற்காக ஆற்றி வரும் பணிக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.” என்றும் தெரிவித்தார்.



## அனுரவுக்கு அலை திரண்டு ஆதரவு

செப்டெம்பர் 21ஆம் திகதிக்குப் பின்னர் அமையவுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ், நீர், மின்சாரம் மற்றும் எரிபொருள் விலைகள் குறைக்கப்படும் எனவும் உணவு, மருந்துகள், ஆய்வுக்கூட பரிசோதனைகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வட் வரியில் இருந்து நீக்கப்படும் எனவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அனுரகுமார திஸாநாயக்க சனிக்கிழமை (17) தெரிவித்தார்.

மாத்தறை-உயன்வத்தை மைதானத்திற்கு வெளியே நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் மாத்தறை மாவட்ட பிரசாரக் கூட்டத்தின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார். அந்தக் கூட்டத்திலும் மக்கள் அலைத் திரண்டு வந்து ஆதரவைத் தெரிவித்திருந்தனர்.

## சஜித்துக்கு அமோக வரவேற்பு

பண்டாரகமையில், சனிக்கிழமை (17) நடைபெற்ற, ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தலில் பிரசார கூட்டத்துக்கு மக்களின் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அங்கு உரையாற்றிய சஜித் பிரேமதாச, மனிதனைத் திருத்தாமல் நாட்டை திருத்த முடியாது நாட்டைக்குத் திருத்துவதாகவும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதாகவும் கூறி ஜனாதிபதி மற்றும் ஆட்சியாளர்கள் அவர்களின் சுகபோக வாழ்க்கையை வாழ்கின்றனர். இதுவே தற்போதைய நிலையாகும்.

அபிவிருத்தி மற்றும் வளர்ச்சி என்பது 220 இலட்சம் மக்களுக்கு உரித்துடையது. ஒவ்வொரு குடிமகனும் உணர்ந்து அதன் பலனை அனுபவிக்க வேண்டும் என்றார்.



## "என் மேடையில் அமருங்கள்"

நாடும் மக்களும் கஷ்டப்படும் போது, சஜித்தும், அனுரவும் ஏன் சவாலை ஏற்றுக்கொள்ள வில்லை என்ற கேள்விக்கு அவர்கள் பதில் கூற வேண்டும் எனவும் பதில் கூற முடியாது என்றால் என்னுடைய மேடைக்கு வந்து இருபுறமும் அமருமாறு அவர்களுக்கு கூறுவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.


எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சாரம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தாம் இதுவரை வெற்றிகரமாக தீர்வு கண்டுள்ளதாகவும் இன்றைய தலைவர்கள் மக்களின் அவலத்தை உணர்ந்திருந்தால் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி அந்த பிரச்சனைகளை தீர்த்திருப்பார்கள் எனவும் கூறினார்.

அனுராதபுரம் சல்காது மைதானத்தில் சனிக்கிழமை (17) நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார். ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நடத்தப்பட்ட முதலாவது கூட்டத்தில், மக்கள் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.



## நாமலுக்கு வாழ்த்து

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, திக்வெல்ல, யோனகபுர முஸ்லிம் சமூகத்திடமிருந்து வாழ்த்துகளைப் பெற்றதுடன், மொஹிதீன் யூமா மசூதியில் தலைமை பாதிரியார் அவருக்கு ஆசியும் வழங்கினார்.



# "தம்பியிடம் மனம் நொந்து அண்ணனிடம் இணைந்தேன்"

ஆ.ரமேஸ்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 20 வருட கால நட்பினை முறித்துக் கொண்டுள்ள அக்கரப்பத்தனை முன்னாள் பிரதேச சபைத் தலைவர் ராமன் கோபால் தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைந்து கொண்டார்.

இவ்வாறு இணைந்து கொண்ட இராமன் கோபாலுக்கு, தொழிலாளர் தேசிய சங்கத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரம் உத்தியோக பூர்வமாக இணைவு கடிதத்தை வழங்கி கட்சிக்கு இணைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



ஹட்டனில் ஞாயிற்றுக்கிழமை(18) நடைபெற்ற தொழிலாளர் தேசிய சங்க கூட்டத்தில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டு இவரை உத்தியோகப்பூர்வமாக இணைத்து கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனது தந்தை இ.தொ.காவின் நீண்ட கால விசுவாசி அதேபோல நான் 20 வருடகால விசுவாசி அதற்காக எனக்கு கிடைத்த சன்மானம் மூன்று மாத பிரதேச சபை தலைவர் மட்டுமேயாகும் என்றார் ராமன் கோபால். அதுவும் அக்கரப்பத்தனை பிரதேச சபை கலைக்கப்படும் நிலையில் இந்த சபை அபிவிருத்தியில் பின் தள்ளப்பட்ட நிலையிலும் காங்கிரஸில் எழுதாத வரலாற்றில் தனக்கு இந்த பதவி வழங்கப்பட்டது அதை சரிவரச் செய்து 90 நாட்களில் சாதனை படைத்தேன்.

அதேநேரம், நான் அக்கரப்பத்தனை பிரதேச சபை தேர்தலில் அதிகப்படியான வாக்குகள் பெற்று தெரிவாகினேன். ஆனால் என்னைப் புறக்கணித்து மற்றவர்களுக்குப் பதவிகள் வழங்கப்பட்டன.

அதேபோலவே அண்மையில் ஆளுநர் ஊடாக வழங்கப்பட்ட பதவியிலும் புறக்கணிக்கப்பட்டு மனம் நொந்த நிலையில் அண்ணன் திகாம்பரத்துடன் இணைந்து கொண்டேன் இந்த மாற்றம் மலையகத்தில் அனைத்து இடங்களிலும் நிலவ வேண்டும் என்றார்.

# "ஜனாதிபதி ரணிலுக்கு வரலாற்று வெற்றி"

வடக்கு, கிழக்கு மக்கள் மற்றும் மலையக மக்கள் உட்பட அனைத்து மக்களின் பேராதரவுடன் ஜனாதிபதித் தேர்தலில், எமது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வரலாற்று வெற்றியைப் பதிவு செய்வார் என்றும் அவரின் அடுத்த ஐந்தாண்டுகால ஆட்சியே இலங்கைக்குப் பொற்காலமாக அமையவுள்ளது எனவும் ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்று பேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்குப் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் எடுத்த முடிவு மக்களின் எதிர்பார்ப்பாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. இதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் தொழில் அமைச்சர் மனுச நாணயக்கார, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்பட சம்பள உயர்வுக்காகக் குரல் கொடுத்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



**"ஜனாதிபதி ரணிலுக்கு பதிலாக ஏனைய வேட்பாளர்களை தெரிவு செய்தால் நாடு மீண்டும் இருண்ட யுகம் நோக்கியே செல்லும். எனவே, இது பரிசோதித்து பார்க்கும் நேரம் அல்ல, சொல்லில் அல்லாமல் செயலில் செய்துகாட்டிய தலைமைத்துவத்துடன் இணைந்து பயணிக்க வேண்டிய தருணம்**

அடுத்தது காணி உரிமையையும் எமது மக்களுக்கு ஜனாதிபதி நிச்சயம் வழங்கி வைப்பார். அவரின் தலைமைத்துவத்தின்கீழ் தான் மலையகத்தில் மறுமலர்ச்சி ஏற்படவுள்ளது. இதனால்தான் மலையக மக்கள் அவரை ஆதரிக்குமாறு கோரிவருகின்றனர். இதற்கமையவே வேலுகுமார் எம்.பியும் ஜனாதிபதிக்கு நேசக்கரம் நீட்டியுள்ளார்.

அமைச்சுப் பதவிகளுக்காகவும், ஏனைய சலுகைகளுக்காகவும் சஜித்துடன் ஒட்டிக்கொண்டிருக்கும் தமிழ் தலைவர்களும், மக்கள் பக்கம் நின்று ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க வேண்டும். ஏனெனில், ஜனாதிபதியின் வெற்றி உறுதியாகியுள்ளது.

ஜனாதிபதி ரணிலுக்கு பதிலாக ஏனைய வேட்பாளர்களை தெரிவு செய்தால் நாடு மீண்டும் இருண்ட யுகம் நோக்கியே செல்லும். எனவே, இது பரிசோதித்து பார்க்கும் நேரம் அல்ல, சொல்லில் அல்லாமல் செயலில் செய்துகாட்டிய தலைமைத்துவத்துடன் இணைந்து பயணிக்க வேண்டிய தருணம்" எனவும் தெரிவித்துள்ளார்.

# 5,000 ரூபாய் போலி நாணய தாள்களுடன் ஒருவர் கைது

இரத்தினபுரி நகரில் 102 போலி 5,000 ரூபாய் நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபருக்கு பதுளை மஹியங்கனை பொலிஸில் நிதிக் குற்றங்கள் தொடர்பான பல வழக்குகள் இருப்பதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இரத்தினபுரி நகரிலுள்ள நகை கடைக்குச் சென்று, ஐந்து இலட்சம் ரூபாவிற்கு நகையைப் பெற்றுக்கொண்டு, ஐந்தாயிரம் ரூபா போலி நோட்டுகளுடன், செல்லுபடியாகும் ஐந்தாயிரம் ரூபா தாள்களைக் கடைக்காரரிடம் கொடுத்த போது, அவை போலி நாணயத்தாள்கள் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில், பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த இவர் தனது வீட்டில் சில காலமாகப் போலி நாணயத்தாள்களை அச்சடித்து வந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

# யானைகள் கணக்கெடுப்பு 3 நாட்கள் இடம்பெறும்

13 ஆண்டுகளின் பின்னர் நாடளாவிய ரீதியில் யானைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது. சனிக்கிழமை (17), ஆரம்பமான கணக்கெடுப்பு நடவடிக்கை திங்கட்கிழமை (19) நிறைவடையும் என யானைகள் தொடர்பான கணக்கெடுப்பு முன்னெடுக்கப்படுமென வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 3,130 நிலையங்களில் யானைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

**"இலங்கையில் யானைகளின் பாதுகாப்பு தேசியக் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், சர்வதேச பாதுகாப்பு முயற்சிகளுக்கு அமைவாக அதனை நாட்டின் பொறுப்பாக உருவாக்கியுள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்களம் குறிப்பிடுகின்றது**

நாட்டில் வாழும் யானைகளின் முழுமையான எண்ணிக்கையை உறுதி செய்து கொள்ளக்கூடிய வகையில், நாடளாவிய ரீதியில் தரவுகள் மற்றும் தகவல்களைப் புதுப்பிக்க 2011ஆம் ஆண்டின் பின்னர் யானைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இதனால் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆசியாவில் யானைகள் வாழும் குறிப்பிட்ட சில நாடுகளில் ஒன்றாகவுள்ள இலங்கையில் யானைகளின் பாதுகாப்பு தேசியக் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், சர்வதேச பாதுகாப்பு முயற்சிகளுக்கு அமைவாக அதனை நாட்டின் பொறுப்பாக உருவாக்கியுள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

# 437 தேர்தல் முறைப்பாடுகள் பதிவு

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 14 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக 7 முறைப்பாடுகளும் வன்முறை சம்பவங்கள் குறித்து 7 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் 03 முறைப்பாடுகள் கிடைத்ததாக தேர்தல் ஆணைக்குழு கூறியுள்ளது.

சட்டவிரோத பிரசார செயற்பாடுகள் தொடர்பில் குறித்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து இதுவரை மொத்தமாக 437 முறைப்பாடுகள் பதிவாகியிருப்பதாக தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.




# பாதயாத்திரை...

வி.ரி.சகாதேவராஜா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற 'சின்னக் கதிர்காமம்' என அழைக்கப்படும் மண்டூர் ஸ்ரீ முருகன் ஆலயத்துக்கான வருடாந்த தல பாதயாத்திரை சனிக்கிழமை(17) ஆரம்பமானது. இந்த பாதயாத்திரை காரைதீவிலிருந்து அதிகாலை நான்கு மணியளவில் ஆரம்பமாகியதுடன், இதில் சுமார் 4,000 அடியார்கள் பக்தி பூர்வமாகப் பங்கேற்றனர்.


















தேவை

பத்தரமுல்லையில் உள்ள உணவகமொன்றுக்கு சமையல்காரர்கள், காசாளர்கள், உதவியாளர்கள் தேவை. தொடர்புகொள்ள - 0773409108 / 0702545892

# குரங்கம்மை தொற்று தொடர்பில் விழிப்பாக இருப்போம்

உலகம் முழுவதும் குரங்கம்மை பாதிப்பு இருப்பதாக உலக சுகாதார அமைப்பு (WHO) தெரிவித்துள்ளது. கொங்கோ குடியரசில் பரவத் தொடங்கிய தொற்றால் இந்த ஆண்டு மட்டும் இதுவரை, ஆபிரிக்காவில் 14,000க்கும் மேற்பட்ட பாதிப்புகள் மற்றும் 524 இறப்புகள் பதிவாகியுள்ளது.

இதில் 96 சதவீதமான பாதிப்புகள் மற்றும் இறப்புகள் கொங்கோவில் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டுச் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. இதுவை மேற்கு, மத்திய மற்றும் கிழக்கு ஆபிரிக்கவில் உள்ள 116 நாடுகளில் இந்த தொற்று பரவி வருகிறது. உலகளாவிய நடவடிக்கையை எடுக்கவில்லை என்றால், குரங்கம்மை ஆபிரிக்க கண்டம் தாண்டியும் பரவும் அபாயம் இருப்பதாக எச்சரிக்கப்படுகிறது.

சின்னம்மையை ஏற்படுத்தும் வைரஸின் குடும்பத்தில் உள்ள மற்றொரு வகை வைரஸே குரங்கம்மையைத் தோற்றுவிக்கிறது. ஆரம்பத்தில் விலங்குகளிடம் இருந்து இந்தத் தொற்று மனிதர்களிடம் பரவியது. தற்போது இது மனிதரிடம் இருந்து மற்றொரு மனிதருக்குப் பரவுகிறது.

காய்ச்சல், தலைவலி, வீக்கம், முதுகுவலி, தசைவலி போன்றவை ஆரம்பக்கால நோய் அறிகுறிகளாகும். காய்ச்சல் வந்தவுடன், தடிப்புகள் ஏற்படும். உடலின் மற்ற இடங்களில் பரவுவதற்கு முன்பு முகத்தில்தான் தடிப்புகள் ஏற்படும். உள்ளங்கை, கைகள் மற்றும் உள்ளங்கால்களிலும் இந்த அம்மை பரவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குரங்கம்மை பாதிப்பைத் தொடர்ந்து வெளிநாடுகளில் இருந்து வருபவர்களுக்கு விமான நிலையங்களிலேயே பரிசோதனை இந்தியாவில் மேற்கொள்ளப்படுகிறது. இலங்கையில் இருக்கும் இரண்டு சர்வதேச விமான நிலையங்களிலும் இவ்வாறான முன்னேற்பாடுகள் எடுக்கப்பட்டமை தொடர்பிலான செய்திகள் வெளியாகவில்லை.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இரண்டாவது முறையாகக் குரங்கு அம்மையை சர்வதேச பொதுச் சுகாதார அவசரநிலையாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது. குரங்கம்மை தொற்று இதுவரை 116 நாடுகளில் பரவியதையடுத்து உலக சுகாதார அமைப்பின் (WHO) அவசரக் குழுக் கூட்டம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

குரங்கு அம்மை வைரஸால் ஏற்படும் ஓர் அரிய வகை தொற்று நோய் இது. குரங்கம்மை வைரஸ் என்பது *Poxviridae* குடும்பத்தின் *Orthopoxvirus* இனத்தைச் சேர்ந்த ஒரு இரட்டை இழை DNA வைரஸ். இந்த வைரஸில் இரண்டு தனித் தனி மரபியல் பிரிவுகள் உள்ளன. முதலாவது பிரிவு மத்திய ஆப்பிரிக்க நாடுகளிலும் (கொங்கோவைச் சுற்றியுள்ள நாடுகள்), இரண்டாவது பிரிவு மேற்கு ஆபிரிக்க நாடுகளிலும் கண்டறியப்பட்டன. இவற்றில் கொங்கோ பகுதியில் கண்டறியப்பட்ட வைரஸே கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றாக இருந்தது. இது வரை ஒரே நாட்டில் இந்த இரண்டு வைரஸ் பிரிவுகளும் கண்டறியப்பட்டது கேமரூனில் மட்டுமே.

1958இல் குரங்கு அம்மை நோய் கண்டுபிடிக்கப்பட்டது. முதன் முதலில் ஆய்வகத்தில் உள்ள குரங்குகளிடமிருந்து கண்டுபிடிக்கப்பட்டதால், இந்த நோய் குரங்கு அம்மை என அழைக்கப்படுகிறது. இந்த நோய் ஆபிரிக்காவின் சில பகுதிகளில் விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு 1970இல் பரவத் தொடங்கியது. மனிதர்களுக்கு ஏற்பட்ட முதல் பாதிப்பு காங்கோ நாட்டில் கண்டறியப்பட்டது. அதன் பின்னர், இந்தத் தொற்று 2017இல் நைஜீரியா, கொங்கோ உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளில் பரவியது. தற்போது இந்தப் பரவல் ஆபிரிக்கக் கண்டத்தைத் தாண்டி உலகெங்கும் பரவத் தொடங்கியுள்ளது. ஆகையால், முன்னெச்சரிக்கையாக இருப்பதே சிறந்தது.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# கொள்கைக்கானதே தமிழர் வாக்கு

**லக்ஸ்மன்**

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்பட்டிருக்கும் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில், சிங்கள மக்களிடையே என்ன பார்வையிருக்கிறது என்பதற்கப்பால், தமிழர்களிடம் எவ்வாறான மனோநிலை இருக்கிறது. என்பதே இப்போது பார்வைக்கும் ஆராய்வுக்கும் உட்படுத்தப்பட வேண்டியதாகும்.

ஜனாதிபதி தமிழ்ப் பொது வேட்பாளராகக் களமிறக்கப்பட்டிருக்கும் அரியநேத்திரன், நம் தமிழர்களுக்கு முன்பின் தெரியாதவரல்ல.

அதனால் தான் அவர் தொடர்பான விமர்சனங்களை வாரி இறைக்குமளவிற்கானதொரு நிலைமை உருவாகியிருக்கிறது. பொதுக் கட்டமைப்பு மாத்திரமல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட வேளையில், ஒரு தும்புத்தடியை நிறுத்தினாலும், அதற்குத் தமிழ்த் தேசியத்துக்கான வாக்கு விழும் என்கிற நிலைமையே காணப்பட்டது. இவ்வாறிருக்க, ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனுக்கு தமிழர்கள் வாக்களிக்கமாட்டார்களா என்று கூடக் கேள்வி கேட்க முடியும்.

இம்முறை சனம் கூட்டமைப்புக்குப் போடாது என கடந்த தேர்தல்களின் போது, அடித்து விடப்படும் கதைகளையே தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பிலும் பரப்பிவிடுகின்ற மாயை ஒன்று தொடங்கியிருக்கிறது. தனி நபர்களைச் சுற்றியதாக எமது மக்களின் அரசியல் கருத்துக்கள் இன்னும் அமைந்துள்ளதையே இது எடுத்துக்காட்டுகிறது.

தேர்தல் என்பது எம்மிடையே உள்ள அனைத்துக் கீழ்த்தரமான குணங்களையும் பிரிவினைகளையும் வெளிக்கொணர்வதற்கான களமாக அமைந்துவிடுவது ஒன்றும் புதிதல்ல. இந்த நச்சுச் சூழலிலிருந்து நாம் விடுபட வேண்டும். தனி நபர்களை மறந்து எமது சந்ததிகளைப் பாதிக்கின்ற பிரச்சினைகள் எவை? அநீதிகள் எவை? என்பதை சரியாக இனங்கண்டு அவற்றை வெல்வதற்கான ஒருங்கிணைந்த ஒரு தேசியக் கொள்கையின் அடிப்படையில் நடைபெறவுள்ள 9ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலை எதிர்கொள்ளவேண்டும்.

வடக்கு, கிழக்குத் தமிழர்களிடையே இருந்து வருகின்ற பிரதேச வாதத்தினைப் பற்றி எரியச் செய்வதற்கு மாற்றீடாக இத் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவு அமைந்திருந்தமை முதலில் பாராட்டப்பட வேண்டியதுதான், வடக்குத் தலைமைகள் இணைந்து ஒரு கிழக்கானை வேட்பாளராகத் தேர்ந்தெடுத்தார்கள். தேர்தல் பிரசார நேரசுசி வடக்கிலிருந்தே தொடங்கியிருக்கிறது. கிழக்கில் நிறைவுக்கு வர இருக்கிறது. இது நல்லதொரு தொடக்கத்தையே காட்டுகிறது. வெற்றிபெறச் செய்வதானது கொள்கைப்பிடிப்பைக் காண்பிக்கின்றதொன்றே.

அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழம் அமைப்பதற்கான ஆணையைத் தமிழ் மக்களிடம் கேட்டபோது, வடக்கு கிழக்கில் பதிவான 781,355 மொத்த வாக்குகளிலிருந்து 53.94 சதவிகிதமான 421,488 வாக்குகளைப் பெற்று 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர்.

1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஜே.ஆர்.ஜயவர்தனவின் அரசாங்க காலத்தில் யாழ். நகரம் சூறையாடப்பட்டு, எரிக்கப்பட்டு, யாழ்ப்பாணத்தின் மதிப்புமிக்க பொது நூலகம் அழிக்கப்பட்ட பிறது நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், இலங்கையின் முதல் தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தந்தை குமார் பொன்னம்பலம் ஆவார். அவர் 1982ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடைபெற்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் போட்டியிட்டு 173 934 வாக்குகளைப் பெற்றார். இது நடைபெற்றது 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு 05 ஆண்டுகளுக்குப் பின்னராகும்.

1982 ஜனாதிபதித் தேர்தலில் "தமிழ் அரசு" என்ற கடுமையான முழக்கத்தை அவர் முன்னெடுத்திருந்தார். அப்போது வடக்கு-கிழக்கில் பதிவான 682,766 வாக்குகளிலிருந்து 173,934 வாக்குகள் (25.48 சதவீதம்) பெற்றார். கடந்த 2020 ஆகஸ்டில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு-கிழக்கிலிருந்து 327,168 (20.97 சதவீதம்) மட்டுமே பெற்றது.

குமார் பொன்னம்பலம் போட்டியிட்டு 42 வருடங்களின் பின்னர், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டாவது தமிழ் பொது வேட்பாளராக, மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் போட்டியிடுகிறார்.

ஈழப் போராட்டத்தின் வரலாற்றில், தமிழ் மக்களின் உரிமைக்காகப் பல ஆயுதக் குழுக்கள் ஆயுத மோதல்கள், கொரில்லா பாணியில் வலம்வந்த போது குமார் போட்டியிட்டார். தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன் இங்கு நடைபெற்ற உள்நாட்டுப் போர் சொல்லொண்ணா கொடூரங்களுடன் மௌனிக்கப்பட்டு 15 ஆண்டுகளுக்குப் பின்னர், வடக்கு - கிழக்கை அழித்து அதன் சமூக கட்டமைப்பைச் சிதைத்து, போருக்குப் பிந்தைய புதிய பிரச்சினைகளுக்கும் நீண்டகால பிரச்சினைகளுக்கும் பதில்களை எதிர்பார்த்து அதிகாரப் பகிர்வு கோரிக்கையோடு முற்றிலும் மாறுபட்ட சூழலில் அவருடைய பெயர் தமிழ்ப் பொதுக் கட்டமைப்பினால் அறிவிக்கப்பட்டது.

தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் தமிழ் அரசியலில் பல முனைகளிருந்து அரசியல் விவாதத்தைத் தோற்றுவித்திருப்பது உண்மையே. தமிழ் மக்களது "மக்கள் அரசியலில்" தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருந்துவந்தது. அதனைக் கட்டுப்படுத்தும் கட்சியாக இலங்கை தமிழரசுக் கட்சிக்கு இப்போது மதிப்பில்லா நிலை தோன்றிவிட்டது, இக் கட்சி இப் பொது வேட்பாளருக்கு எதிர் நிலைப்பாட்டையே எடுத்திருக்கிறது.

> **ஒவ்வொரு தேர்தல் பிரசாரத்திலும் முக்கிய விதி 'மக்கள்' மீது கவனம் செலுத்த வேண்டும். நிபந்தனைகள் மற்றும் சமரசங்கள் இல்லாமல் மக்களைச் சென்றடையக்கூடிய விடயங்களே முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்**

போருக்குப் பிந்தைய இலங்கைத் தமிழ் அரசியலில், அவர்கள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுடனும் அவர்களது உணர்வுப்பூர்வமான பிரச்சினைகளான காணாமலாக்கப்பட்டவர்களது பிரச்சினைகள், அதிகாரிகள் மற்றும் சிங்கள குடியேற்றக்காரர்களால் நில அபகரிப்பு எனப் பல விடயங்களுக்குத் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளால் சொல்லிக் கொள்ளக்கூடிய அளவுக்கு எதனையும் செய்ய முடியவில்லை. இவைகள் தொடர்பில் போராட்டங்களை நடத்திய மக்களே பாதிக்கப்பட்டுவருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பு மனுத் தாக்கல் முடிந்த பின்னரும் இலங்கைத் தமிழரசுக் கட்சி பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களின் பின்னரே தமது ஆதரவு குறித்து அறிவிப்பதாகவும், கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கிறது.

இந்த இடத்தில், எந்தவொரு சிங்கள பௌத்த ஜனாதிபதி வேட்பாளரும் தமிழ் மக்களுக்கு மதிப்புமிக்க எதையும் உறுதியளிக்க மாட்டார்கள். அவர்கள் நம்பும் அளவிற்குத் தீர்வுகளை உறுதியளித்தாலும், அவர்களின் சிங்கள-பௌத்த பிம்பம் சிதைக்கப்படாது, ஆட்சிக்கு வந்ததும் அனைத்து வாக்குறுதிகளும் புறக்கணிக்கப்படும் என்பதே கடந்தகால நிதர்சனங்களாகும்.

1957இல் கையொப்பமிடப்பட்ட பண்டாரநாயக்கா-செல்வநாயகம் உடன்படிக்கை பௌத்த பிக்குகள் குழு ஒன்று எதிர்ப்புத் தெரிவித்தபோது, செல்வநாயகத்திற்குத் தெரிவிக்காமல், பண்டாரநாயக்கவால் 10 மாதங்களுக்குள் கிழித்து எறியப்பட்டது. 1965இல் பிரதமர் டட்லி சேனாநாயக்கவுக்கும் செல்வநாயகத்துக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் காணாமல் போனது. 1968 ஜூன் மாதம் பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்பட்ட மாவட்ட சபை சட்டமூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் பின் வரிசை உறுப்பினர்களாலும் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான எதிர்க்கட்சியினராலும் எதிர்க்கப்பட்டது.

அவருக்கு லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆதரவளித்தது.

பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான குழப்பமான நல்லாட்சி அரசாங்கத்தைப் பாதுகாப்பதில் சுமந்திரன் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார். பாராளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரத்னவுடன் இணைந்து புதிய அரசியலமைப்பை உருவாக்க முடியும் என்ற குருட்டு நம்பிக்கையை அவர் வளர்த்துக் கொண்டிருந்தார், அது தோல்வியில் முடிந்தது. 2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத நடைபெற்ற தேர்தலில் தமிழ் வாக்காளர்களுக்குக் காண்பிக்கக் கையில் ஒரு வரை வோலைகூட இல்லாமல் தேர்தல் நடந்தேறியது.

தமிழ் மக்களுக்கான பதில்களைப் பெறுவதற்குத் தென்னிலங்கை சிங்களத் தலைவர்களுடன் நடைபெற்ற முயற்சிகள் வெற்றியோ எந்தவித முன்னேற்றமே இன்றித் தொடர்கதையாகவே இருக்கிறது. இந்த நிலையில்தான் ஜனாதிபதி தமிழ்ப் பொது வேட்பாளரைப் பார்த்துநிற்கிறோம். இந்த அறிவிப்பானது தென்னிலங்கையில் ஒரு கிலியைத் தோற்றுவித்திருக்கிறது என்பது உண்மையே. இருந்தாலும், வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் வேட்பாளர் ஒரு சமஸ்றி கோரிக்கைக்கான கொள்கையுடன் நின்றாக வேண்டும். ஏனெனில், அக்கோரிக்கையினை விடவும் போதுமான நியாயம் தமிழர்களிடம் உள்ளது என்ற அடிப்படையில் அது நிகழ்த்தப்பட வேண்டும்.

ஒவ்வொரு தேர்தல் பிரசாரத்திலும் முக்கிய விதி 'மக்கள்' மீது கவனம் செலுத்த வேண்டும். நிபந்தனைகள் மற்றும் சமரசங்கள் இல்லாமல் மக்களைச் சென்றடையக்கூடிய விடயங்களே முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் வெற்றி பெறுவதற்கான பிரச்சாரம் அல்ல என்பதைத் தமிழ்ப் பொதுக் கட்டமைப்பு கூட்டமைப்பு நினைவில் கொள்ளவேண்டும். இது பேச்சுவார்த்தைகளுக்கான அரசியல் நிலைப்பாட்டை நிறுவுவதற்கான பிரசாரம் பற்றியது. இது வாக்குகளை எண்ணுவது அல்ல, தமிழ் மக்களின் கொள்கைப் பிடிப்பை வெளிப்படுத்துவதுமாகும்.

எனவே, இத்தேர்தல் எம்மிடையே உள்ள அனைத்துக் கீழ்த்தரமான குணங்களையும் பிரிவினைகளையும் வெளிக்கொணர்வதற்காக அல்ல எம்மை, எமது சந்ததிகளைப் பாதிக்கின்ற பிரச்சினைகள், அநீதிகளை இனங்கண்டு அவற்றை வெல்வதற்காக ஒருங்கிணைவதற்கே என்று ஒரு தேசியக் கொள்கையின் அடிப்படையில் இத் தேர்தலை எதிர்கொள்ளவேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

சிந்தனை ஓட்டங்கள் விஸ்தீரணம் அடையும்போது, அதனோடு இணைந்தவர்கள் பரோபகாரிகளாகி விடுகின்றனர். இது இயல்பான நிலைதான்.

நற்சிந்தனையுடன் தம்மைச் சுற்றியிருப்பவர்களின் நலன்பற்றி, அக்கறை கொண்டால், அதுவே அவர்களின் பரந்த நற்பண்பைத் தானாகவே மாற்றிவிடுகின்றது.

எவராலுமே சிறப்பான வாழ்வை உருவாக்க முடியும். ஆனால், நடைமுறை வாழ்வில் பலவித பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எவருமே துன்பங்களை விரும்புவதில்லை. எனினும், இன்பங்களும் துன்பங்களும் வந்துபோன வண்ணமே உள்ளன.

வாழ்க்கை என்பது அற்புதமான தேன்கூடு. பல்லாயிரம் தேனீக்கள், பலகோடி மலர்களில் இருந்து, தேனைச் சேகரிக்கின்றன. உழைப்பின் முழு வடிவத்தையும் இந்தச் செயற்பாடு உருவகிக்கின்றது. தேனீக்களின் இந்தத் தொண்டுக்கு, நிகர் பிறிதொன்றுமில்லை. இதேபோலவே, மனித இனம், தன்னை வளப்படுத்தப் போராடிக்கொண்டே இருக்கின்றது. இந்தப் போராட்டத்தை, ஆதரிக்க வேண்டியது நம்மவர்களின் தலையாய கடமையாகும். எனவே, சிந்தனையாளர்கள் மனித இனத்தின் மீது அக்கறை செலுத்துவதும். அறிவுரை சொல்வதும் அவர்களது கடமையாகிவிட்டன. மக்களின் பிரதிநிதிகள் இவர்களாவர்.

-பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வாழ்வாதாரங்கள் பாதிப்பு

கிளிநொச்சி-கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தர்மபுரம் பகுதியில் மக்கள் குடியிருப்புகள் பகுதியில் காட்டு யானையால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இருபதுக்கு மேற்பட்ட வாழைகள், 1/4 ஏக்கரில் செய்கை மேற்கொள்ளப்பட்ட சோழன், பலாக் காய்கள், தென்னை உள்ளிட்டவை யானையால் முற்று முழுதாக சேதமாக்கி உள்ளதாக வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்துள்ளார்

மேலும், யானை பிரதேசத்திற்கு வராமல் தடுப்பதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

- பு.கஜிந்தன்



Sunshine Holdings

# வலுவான நிதிச் செயல்திறன் பதிவு

சன்ஷைன் ஹோல்டிங்ஸ், சவாலான பொருளாதார சூழ்நிலைமைகளுக்கு மத்தியிலும் வலுவான நிதிச் செயல்திறனை பதிவு செய்தது, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2024/25 நிதியாண்டின் முதல் காலாண்டில் 6.5% அதிக வருவாய் வளர்ச்சியைப்பதிவு செய்துள்ளதுடன் சன்ஷைன் குழுமம் நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் (1QFY25) 14.2 பில்லியன் ரூபாய் ஒருங்கிணைந்த வருவாயை பதிவு செய்துள்ளது.

அவர்களின் வரிக்குப்பிந்தைய இலாபம் (PAT) கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 3.6% குறைந்து 1.4 பில்லியன் ரூபாயாக அமைந்திருந்தது. நுகர்வோர் மற்றும் விவசாய வணிகப்பிரிவுகளில் வருவாய் குறைந்தாலும், ஹெல்த் கெயார்பிரிவில் வலுவான செயல்திறன் இந்த வருவாய் வளர்ச்சிக்கு வழிவகுத்தமை குறிப்பிடத்தக்கது.

மொத்த வருவாயில் 53.1% கணக்கைக் கொண்ட குழுவின் இந்த உயர் வளர்ச்சிக்கு ஹெல்த்கெயார் பிரிவு அதிக பங்களிப்பை செய்திருந்தது. இதற்கிடையில், குழுமத்தின் மொத்த வருவாயில் நுகர்வோர் பிரிவு 32.4% மற்றும் விவசாய வணிகப் பிரிவு 14.5% பங்களித்தது.

இந்த நிதிநிலை முடிவுகள் குறித்து கருத்து தெரிவித்த சன்ஷைன் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷியாம் சதாசிவம், "சன்ஷைன் FY25 இன் முதல் காலாண்டின் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதால், வலுவாகவும் புத்தாக்கங்களில் கவனம் செலுத்தவும் உறுதியாக உள்ளது. தற்போதைய பொருளாதார சவால்கள், குறிப்பாக வரி மாற்றங்கள், மக்களின் செலவு பணப் பழக்கத்தை எவ்வாறு பாதித்துள்ளது என்பதை நாங்கள் புரிந்து கொள்கிறோம்.

இது குறித்து நாங்கள் மிகவும் கவனமாக இருந்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இந்த பொருளாதார சவால்கள் இருந்தபோதிலும், குழுவின் வலுவான நிதி முடிவுகள், சிறந்து விளங்குவதற்கான எங்கள் குழுவின் வலுவான அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும். வரவிருக்கும் சவால்களை முறியடிக்கும் அதே வேளையில் வளர்ச்சியடைவதற்கான புதிய வாய்ப்புகளை நாங்கள் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்வோம்" என தெரிவித்தார்.

ஹெல்த்கெயார் பிரிவு

குழுவின் ஹெல்த்கெயார் பிரிவு மதிப்பாய்வு செய்யப்பட்ட காலாண்டில் முதல் காலாண்டில் 7.6 பில்லியன் ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது, உற்பத்தி மற்றும் மருந்து வணிகங்களின் ஆதரவுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 19.8% குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். குழுமத்தின் மருந்து வணிகமான Leena Manufacturing Pvt நிறுவனம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 104.4% வருவாய் வளர்ச்சியை எட்டியுள்ளது. Metered-Dose இன்ஹேலர் (MDI) தொழிற்சாலையில் உற்பத்தி அதிகரித்ததே இதற்குக் காரணம். இதனால் Leena Manufacturing நிறுவனம் இப்போது அரசாங்கத்தின் MDI தேவையின் பெரும்பகுதியை வழங்க முடிகிறது.

நுகர்வோர் பிரிவு ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு வர்த்தகங்களை உள்ளடக்கிய நுகர்வோர் பிரிவின் வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 1-9% வரை சிறிதளவு வீழ்ச்சியடைந்துள்ள போதிலும், 4.6 பில்லியன் ரூபாய் வருமானத்தை பதிவு செய்ய முடிந்தது. எவ்வாறாயினும், ஜனவரி 2024இல் VAT திருத்தத்திற்குப்பிறகு, நுகர்வோர் துறையின் செயல்திறன் FY24 நான்காவது காலாண்டுடன் ஒப்பிடும்போது 2.6% வளர்ச்சியை காட்டியது.

குழுமத்தின் முத்திரையிடப்பட்ட தேயிலை வகை மற்றும் இனிப்பு மிட்டாய் வணிகங்களின் வருவாய்கள் ஆண்டுக்கு ஆண்டு 16.9% வீழ்ச்சியடைந்தன, அந்த பிரிவுகளில் குறைந்த விற்பனை அளவு உந்தப்பட்டது. முக்கிய சந்தைகளில் அதிகதேவை மற்றும் குறைந்த தேயிலை விலை காரணமாக ஏற்றுமதி வணிகத்தின் வருவாய் 31.1% அதிகரித்துள்ளது.

விவசாய வணிகப் பிரிவு குழுமத்தின் விவசாய வணிகப் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்தும் வட்டவளை பிளான்டேஷன்ஸ், கடந்த ஆண்டை விட 12.1% வீழ்ச்சியுடன் 2.1 பில்லியன் ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது. கடந்த ஆண்டை விட ஃபாம் ஒயில் வணிக வருவாயில் 13.8% கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டதே இதற்குக் காரணம்.பால் தொடர்பான வியாபாரத்தின் மூலம் 326 மில்லியன் ரூபாய் வருமானத்தை பதிவு செய்ய முடிந்தது.பால் வணிகமானது FY25 இன் முதல் காலாண்டில் வரிக்குப் பிந்தைய இலாபம் (PAT) 8.2% ஆகப் பதிவாகியுள்ளது, கடந்த ஆண்டு இதே கால கட்டத்துடன் ஒப்பிடுகையில் 12.8% வீழ்ச்சி, அதிகரித்த பால் உற்பத்தி மற்றும் குறைந்த தீவனச் செலவுகளின் பின்னணியே இதற்கு காரணமாகும்.



# கொமர்ஷல் வங்கிக்கு யூரோமனி அங்கீகாரம்

சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG)திட்டப்பணிக்கான வங்கியின் அர்ப்பணிப்புக்காக சர்வதேச அங்கீகாரத்தை ஏற்படுத்தி வரும் யூரோமனி விருதுகள் நிகழ்வில் (Euromoney Awards for Excellence) கொமர்ஷல் வங்கி, 2024 ஆம் ஆண்டில் 'ESG க்கான இலங்கையின் சிறந்த வங்கி'ஆக தெரிவு செய்யப்பட்டுள்ளது.



கொமர்ஷல் வங்கி வென்ற மதிப்புமிக்க யூரோமனி விருது, வங்கியின் கிளை வலையமைப்பு முழுவதும் ESG திட்டப்பணியின் சிறந்த நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் வங்கியால் செயல்படுத்தப்பட்ட பல உள்ளக மற்றும் வெளியக முயற்சிகள் மற்றும் செயல்முறைகளினை அங்கீகரிக்கிறது.

ஆற்றல்-திறனுள்ள செயல்பாடுகள் ஊடாக சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைத்தல், அதன் கார்பன் தடத்தைக் குறைத்தல் மற்றும் பசுமையான எதிர்காலத்தை ஆதரிப்பதற்காக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு நிதியளித்தல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிப்பதாக வங்கி தெரிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கி நிதியியல் உள்ளடக்கம், பாலின சமத்துவம் மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டங்களை ஆதரிப்பதன் மூலம் சமூக நிலைப்பேற்றினை தீவிரமாக ஊக்குவிக்கிறது. உதாரணமாக, வங்கியின் மகளிர் வங்கி முயற்சியானது, பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு தேவையான நிதியியல் கருவிகள், வளங்கள் மற்றும் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்களை வலுப்படுத்துகிறது. மேலதிகமாக, இலக்கிடப்பட்ட சமூக திட்டங்கள் மற்றும் பங்குடைமை மூலம் பின்தங்கிய சமூகங்களை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக வங்கி தெரிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க தெரிவிக்கையில், "எமது வலுவான நிர்வாக திட்டப்பணியானது, எங்களின் அனைத்து நடவடிக்கைகளிலும் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் ஒருமைப்பாடு, பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாத்தல் மற்றும் தொழில்துறை அளவுகோல்களை உறுதிப்படுத்துகிறது. கூட்டாண்மை நிர்வாகத்தின் மிக உயர்ந்த தரங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம், எங்கள் வங்கி மற்றும் நாங்கள் சேவை செய்யும் சமூகங்களுக்கு நீண்டகால நிலையான வளர்ச்சியை உறுதிசெய்து, மிகுந்த நேர்மை மற்றும் பொறுப்புடன் செயல்படுவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை நாங்கள் வெளிப்படுத்துகிறோம். இந்த முழுமையான அணுகுமுறையின் மூலம், கொமர்ஷல் வங்கி தனது வர்த்தகத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் நிலைப்பேற்றினை ஒருங்கிணைத்து, அதன் செயல்பாடுகள் சுற்றுச்சூழலுக்கும் சமூகத்திற்கும் சாதகமாக பங்களிப்பதை உறுதி செய்வதில் அதன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது" எனறார்.

யூரோமனி விருது என்பது, வங்கியின் பன்முக சமூகத் திட்டங்களின் பயன்களுக்கான ஒரு அங்கீகாரமாகும்.



# உன்னதமான கலை



பெரியசாமிப்பிள்ளை செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி

எடுப்பதென்றால், எப்பொழுதுமே எங்களுக்கு ஒரு தனிப் பிரியம் தான்! இந்த உலகில் நாம் வாழும், வாழ்ந்த காலங்களை என்றென்றும் நினைவுபடுத்துபவை புகைப்படங்கள் தான்!

பிறந்த நாள் கொண்டாடுகின்றோம் என்பதன் மறைமுகமான அர்த்தம், எமது வாழ்வில் ஒரு வருடம் அதிகரித்துள்ளது என்பதாகும். வருங்கள் கழிந்தாலும் கடந்து வந்த காலங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் தான் கடந்து வந்த காலத்தினை நினைவுபடுத்துவதுடன் எம்மை எப்பொழுதும் இளமையாக வைத்துள்ளது.

அந்த புகைப்படங்களை நிகழ்காலத்தில் பார்க்கும் பொழுது, நாம் அந்த காலத்திற்கே சென்று விடுவதானதொரு புத்துணர்ச்சி எம் மனதில் ஏற்படுத்துகின்றதல்லவா!

கவிஞர் வைரமுத்தின் கருத்தாழமிக்க கவிதை "முன்னோக்கி எனை நடத்தி முதுமை செய்யும் காலங்காள் பின்னோக்கி எனை நடத்தி பிள்ளையாக்கக் கூடாதா.." என்பதாகும். எமது பழைய புகைப்படங்களைப் பார்க்கும் பொழுது இந்த வரிகள் தான் எமது சிந்தையை தட்டிச் செல்கின்றன. எமது வாழ்க்கையிலேற்பட்ட மகிழ்ச்சியான தருணங்களையும், துயரமான சம்பவங்களையும் நம் கண்முன்னே கொண்டு வந்து காட்டும் அவைகள் காலத்தின் பொக்கிஷங்கள்.

புகைப்படம் என்பது தனியே ஒரு படம் அல்ல. அது புகைப்படவியலாளர்களின் திறமையை வெளிப்படுத்துகின்ற ஓர் உன்னதமான கலை.

பிரசித்திப் பெற்ற புகைப்படவியலாளர்கள் தமது படங்களின் மூலம் பல கருத்துக்களை ஒரே நேரத்தில் வெளிப்படுத்தும் விதமாக எடுப்பது அவர்களது கைவந்த கலை.

ஆகஸ்ட் 19 'உலக புகைப்பட தினமாகும்'.

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், Louis Daguerre, Joseph Nicephore Niepee ஆகிய இருவரும், "daguerreotype process " எனப்படும் புகைப்படத்தின் செயல்பாட்டு முறையை வடிவமைத்தனர்.

1839ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதி 'French Academy of Sciences' இம் முறைக்கு அங்கீகாரம் அளித்தது.

1839ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டு அரசு, ஆகஸ்ட் 19ஆம் திகதி டாகுரியோடைப் செயல்பாட்டை உலக மக்கள் அனைவரும் இலவசமாகப் பயன்படுத்தலாம் என அறிவித்தது.

அன்றிலிருந்து இன்றுவரை ஒவ்வொரு வருடமும் இத்தினம் உலகப் புகைப்படத் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

புகைப்படக்கலையில் முன்னோடியான நாடாகக் கருதப்படுவது பிரான்சு தேசமாகும்.

அதே ஆண்டு பிரித்தானிய விஞ்ஞானியான Sir John Herschel என்பவர் கண்ணாடியை பயன்படுத்தி நெகட்டிவ்களை எடுக்கும் முறையினை கண்டுபிடித்தார்.

இவ்வாறான கலைக்கு 'போட்டோகிரபி' என பெயரிட்டவரும் இவரே !

கேமரா அப்ஸ்குரா, நெகட்டிவ் முறை, சில்வர் காப்பர் பிளேட், பேப்பர் பிலிம், டிஜிட்டல் கேமரா, ஸ்மார்ட்போன் என புகைப்படக் கலையில் பல மாற்றங்களும், முன்னேற்றங்களும் இன்று ஏற்பட்டுள்ளன.

பாரம்பரிய புகைப்படக் கலையிலிருந்து வர்த்தக ரீதியிலான புகைப்படக் கலை முறைக்கு முதன் முதலாக மாற்றிய நிறுவனம் கொடெக் ஆகும்.

இந்நிறுவனம் தனது சந்தைப்படுத்தல் நுட்பமாகப் பயன்படுத்திய வாசகம் தான், "பொத்தானை அழுத்துங்கள். மிகுதியை நாங்கள் செயல்படுத்துகின்றோம்" என்பதாகும்.

மிகச் சிறந்த புகைப்படக் கலைக்குப் பெயர் பெற்ற நாடு பெரு (Peru) ஆகும்.

எமது முன்னோர்கள் அக்காலங்களில் கருப்பு வெள்ளை நிறத்திலான புகைப்படங்களை எடுத்து, அவற்றை அழகாக கண்ணாடிச் சட்டத்தினுள் பொருத்தி, வீடுகளில் மாட்டி விடுவதானது இன்றும் எம் மனக்கண் முன் நிற்கின்றது.

இன்றும் பலரது வீடுகளில் கறை படிந்த கண்ணாடிக்குள், கரையான் அரித்த அட்டையில் ஒட்டியிருக்கும் படங்களைப் பார்க்கும் பொழுது, எமது மூதாதையர்களின் மறக்க முடியாத வாழ்க்கை நினைவுகளை, அவைகள் அசை போட வைக்கின்றதென்றால் அது மிகையாகாது. காலம் வேகமாக சுழன்று கொண்டிருக்கின்றது.

கால ஓட்ட மாறுபாட்டிற்கேற்ப நாமும் இன்றைய காலகட்டத்தில் புகைப்பட கலைஞர்கள் தான்.

இன்று பல்வேறு விதமான படங்களை நாங்கள் எங்களது கையடக்கத் தொலைபேசியில் (மொபைல் போனில்) எடுக்கின்றோம்.

ஆனால், சிறந்த புகைப்படங்களாகக் காணப்படுபவை தொழில் சார்ந்த புகைப்படவியலாளர்களால் எடுக்கப்படுகின்ற புகைப்படங்களே ஆகும்.

**"ஆயிரம் வார்த்தைகளைப் பயன்படுத்தி சொல்லப்படுகின்ற ஒரு விடயத்தை தங்களது ஒவ்வொரு புகைப்படத்தின் மூலமாக அவர்கள் உலகிற்கு தெளிவாக விளக்கி விடுகின்றனர். அதனால் தான், புகைப்படங்களை சிறந்த 'செய்திக் கடத்தி' என குறிப்பிடுகின்றனர்**

புகைப்படத் துறையில் ஆர்வம் காட்டவும், மக்களை ஊக்குவிக்கவும் உலகப் புகைப்படத் தினம் முக்கியமானது.

ஆயிரம் வார்த்தைகளைப் பயன்படுத்தி சொல்லப்படுகின்ற ஒரு விடயத்தை தங்களது ஒவ்வொரு புகைப்படத்தின் மூலமாக அவர்கள் உலகிற்கு தெளிவாக விளக்கி விடுகின்றனர்.

அதனால் தான், புகைப்படங்களை சிறந்த 'செய்திக் கடத்தி' என குறிப்பிடுகின்றனர்.

இன்றைய உலகில், மத்திய தர வர்க்கத்தினர் உட்பட அனைவரும் இக்கருவியைப் பயன்படுத்தக் கூடிய நிலையிலுள்ளனர்.

உலக சரித்திரத்தையே மாற்றி அமைத்த புகைப்படங்களாக 1989ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் திகதி சீன வீரர்களின் பீரங்கிகளை எதிர்த்து நின்ற "Tank Man" புகைப்படம், வியட்நாம் போரை நிறுத்த காரணமாக இருந்த சிறுமியின் புகைப்படம், போபாலின் விஷவாயு தாக்கிய சிறுமியின் புகைப்படம், ஹிரோஷிமா நாகசாகி வெடிகுண்டு புகைப்படம் போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

இன்றைய தினத்தில் போர் சூழ்ந்துள்ள இடங்களில் தமது உயிரையே துச்சமாக மதித்து புகைப்படங்கள் எடுப்பவர்களையும், மற்றும் வனாந்தரங்களில், பாலைவனங்களில், சமுத்திரங்களில், ஆகாயத்தில், புகைப்படம் எடுக்கும் அனைவரையும் நினைவு கூர்ந்து அவர்களுடைய அளப்பரிய சேவையை பாராட்டுவதும் அவசியமாகும்.

டாக்கா

பங்களாதேஷ் வன்முறையில்

# 650 பேர் பலி

பங்களாதேஷில் நடந்த வன்முறையில் 650 பேர் உயிரிழந்துள்ளனர் என ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஷேக் ஹசீனா அரசுக்கு எதிரான போராட்டங்கள், கலவரம் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் 10 பக்க அறிக்கை வெளியிட்டுள்ளது.




அதில் கூறியிருப்பதாவது, "ஜூலை 16ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 4ஆம் திகதி வரை 400 பேரும், ஆகஸ்ட் 5,6ஆம் திகதிகளில் 250 பேரும் உயிரிழந்துள்ளனர். கைது, உயிர் பலி குறித்து பாரபட்சமின்றி விசாரணை நடத்த வேண்டும். சிறுபான்மை மதத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களது வீடுகளுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 15ஆம் திகதி ஷேக் முஜிபுர் ரஹ்மானின் நினைவு நாளில் அவருக்கு அஞ்சலி செலுத்த கூடியிருந்த முன்னாள் பிரதமரின் அவாமி லீக் கட்சி ஆதரவாளர்களை மூங்கில் குச்சிகள், இரும்பு கம்பிகள் மற்றும் குழாய்களுடன் ஆயுதம் ஏந்திய கும்பல் தாக்கியுள்ளனர். சட்டம் ஒழுங்கு சீர்குலைவை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உயிரிழப்பு, வன்முறை மற்றும் பழிவாங்கும் செயல்களைத் தடுக்க அவசியம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆபத்தில் இருக்கும் மக்களை அரசு பாதுகாக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மொஸ்கோ

இயற்கை பேரிடரால்

# அலறும் ரஷ்ய மக்கள்

ரஷ்யாவின் கிழக்குக்கரை பகுதியில் திடீரென சக்திவாய்ந்த நிலநடுக்கமும், அதைத்தொடர்ந்து எரிமலை வெடிப்பும் ஏற்பட்டதால் பொதுமக்கள் பீதியடைந்தனர்.

ரஷ்யாவின் கிழக்கு கடல் பகுதியான கம்சட்காவில், நேற்று நள்ளிரவு 12.40 மணிக்கு திடீரென சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிக்டர் அளவுகோலில் 7 ஆக பதிவானது. இதனால், கட்டிடங்கள் குலுங்கியதால், அப்பகுதி மக்கள் பீதியில் ஆழ்ந்தனர். ஒரு சில பகுதிகளில் பொதுமக்கள் வீடுகளை விட்டு அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடி சென்றுள்ளனர்.

சென்னை

# கருணாநிதிக்கு நாணயம் வெளியீடு

திராவிட முன்னேற்ற கழகம், (தி.மு.க.) சார்பில் கருணாநிதி நூற்றாண்டு விழா, பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த நிலையில், கருணாநிதியின் நூற்றாண்டையொட்டி மத்திய அரசு சார்பில் அவரின் உருவம் பொறித்த ரூ.100 நாணயத்தை மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் ஞாயிற்றுக்கிழமை (18) வெளியிட்டார்.

வெளியீட்டு விழா சென்னை கலைவாணர் அரங்கில் மாலை 6.50 மணியளவில் நடைபெற்றது. விழாவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை வகித்து உரை நிகழ்த்திய நிலையில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் முன்னிலை வகித்தார்.

மேலும், மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், கருணாநிதியின் நூற்றாண்டு நினைவு நாணயத்தை வெளியிட்டு சிறப்புரை நிகழ்த்தியதோடு, தமிழக அமைச்சர்கள், பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க.) மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை உட்பட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.




சென்னை

# "குரங்கம்மை பாதிப்பு இல்லை"

தமிழகத்தில் குரங்கம்மை பாதிப்பு யாருக்கும் இல்லை என அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார். மேலும், குரங்கம்மை பாதிப்பைத் தொடர்ந்து வெளிநாடுகளில் இருந்து வருபவர்களுக்கு விமான நிலையங்களிலேயே பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், "உலகம் முழுவதும் குரங்கம்மை பாதிப்பு இருப்பதாக உலக சுகாதார அமைப்பு (WHO) தெரிவித்துள்ளது. சில தினங்களுக்கு முன்பு மத்திய அமைச்சர் ஜே.பி. நட்டா இது தொடர்பான கூட்டத்தை கூட்டி இந்தியாவில் யாரும் குரங்கம்மை நோயால் பாதிக்கப்படவில்லை.

அத்துடன், தமிழகத்தில் குரங்கம்மை நோய்த் தொற்றால் இதுவரை யாரும் பாதிக்கப்படவில்லை. குரங்கம்மை பாதிப்பு தொடர்பான விழிப்புணர்வு பலகையை அனைத்து விமான நிலையங்களிலும் வைக்க இருக்கிறோம். நானும் அதை ஓரிரு நாட்களில் ஆய்வு செய்ய இருக்கிறேன். வெளிநாடுகளில் இருந்து வருபவர்களுக்கு விமான நிலையங்களிலேயே பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. ஏதேனும் அறிகுறிகள் இருந்தால் அவர்களுக்கு அங்கேயே சிகிச்சை அளிக்கப்படும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



கொல்கத்தா

# 'ராத்திரேர் ஷாதி'

இரவு நேர பணிக்கு செல்லும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், இரவில் துணை வருபவர்கள் என்று பொருள்படும் 'ராத்திரேர் ஷாதி' [Rattirer Sathi] என்ற புதிய திட்டத்தை மேற்கு வங்க அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.




மேற்கு வங்கத்தின் கொல்கத்தாவில், ஆர்.ஜி.கர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில், முதுநிலை இரண்டாம் ஆண்டு படித்த, 31 வயது பயிற்சி பெண் மருத்துவர் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு கொல்லப்பட்டார்.

இதன் தொடர்ச்சியாக ஒருபுறம், மேற்கு வங்கத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என எதிர்க்கட்சி குற்றம் சாட்டி வருகின்ற நிலையில், மறுபுறம் மருத்துவர்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளதால் அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இரவு நேர ஷிப்ட் வேலைக்கு செல்லும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய புதிய திட்டம் ஒன்றை மேற்கு வங்க அரசு அறிமுகப்படுத்தி உள்ளது.

அந்தவகையில், பல்வேறு இடங்களில் சி.சி.ரி.வி. கெமராக்கள் பொருத்தப்பட உள்ளன. இரவில் பெண் தன்னார்வலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள். நைட் ஷிப்ட் வேலைக்கு செல்லும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அலாரம் சிஸ்டம் கொண்ட பிரத்தியேக செல்போன் செயலி உருவாக்கப்பட உள்ளது. இந்த செயலியை (ஆப்) டவுன்லோட் செய்ய வேண்டும்,

இந்த செயலி, ஆபத்து சமயங்களில் உள்ளூர் பொலிஸ் நிலையம் மற்றும் கண்ட்ரோல் ரூம்களை தொடர்பு கொள்ளும் வகையில் உருவாக்கப்பட உள்ளது.

அதுபோல், மருத்துவமனைகள், பெண் விடுதிகள், கல்லூரிகளில் நுழையும் நபர்கள் மது அருந்தியதை கண்டறியும் ப்ரீத் அனலைசர் சோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

மேலும், மருத்துவமனைகளில் உள்ள ஒவ்வொரு தளத்திலும் பெண்களுக்கான கழிவறைகள் மற்றும் குடிநீர் வசதிகளை ஏற்படுத்த வேண்டும். பெண்கள் விடுதிகள் மற்றும் மருத்துவமனைகளுக்கு அருகில் பொலிஸார் அடிக்கடி பாதுகாப்பு பணியில் ஈடுபட வேண்டும்.

பெண்கள் ஒரு நாளைக்கு 12 மணி நேரத்துக்கு மேல் வேலை செய்ய கூடாது. குறிப்பாக, பெண்கள் முடிந்த அளவு நைட் ஷிப்டை தவிர்க்க வேண்டும் எனவும் மாநில அரசு வலியுறுத்தியுள்ளது.




அறுகம்பே அரை மரதன் ஓட்டப் போட்டியில்

# அவிசாவளை விமலும், கென்யா அனிகாவும் முதலிடம்

■ ஏ.எல்.எம்.ஷினாஸ்



அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்து நடத்திய அறுகம்பே அரை மரதன் ஓட்டப் போட்டியின் 21.1 கிலோ மீற்றர் போட்டியில் ஆண்கள் பிரிவில் அவிசாவளையைச் சேர்ந்த விமல் காரியவசம் முதலாம் இடத்தையும், வெலிடையை சேர்ந்த ரீ.டபள்யூ.ரத்னபால இரண்டாமிடத்தையும், டென்மார்க்கை சேர்ந்த பெஸ்டியன் குலோஸ்கோ மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.




பெண்கள் பிரிவில் கென்யாவைச் சேர்ந்த அனிகா பேலிம் முதலாம் இடத்தையும், ஜேர்மனியை சேர்ந்த டீ.அனிகா டோன் இரண்டாமிடத்தையும், அவுஸ்திரேலியாவை சேர்ந்த சஸாலி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டார்.

சுற்றுலா துறையை ஊக்குவிக்கும் பொருட்டு அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்து நடத்திய அறுகம்பே அரை மரதன் ஓட்டப்போட்டி ஞாயிற்றுக்கிழமை (18) பொத்துவில் அறுகம்பே பிரதேசத்தில் கோலாகலமாக இடம்பெற்றது. உள்நாட்டு, வெளிநாட்டு வீரர்கள் என 260 பேர் கலந்து கொண்ட குறித்த மரதன் ஓட்டப்போட்டியானது 21.1 கிலோ மீற்றர் அரை மரதன், 10 கிலோ மீற்றர் மற்றும் 5 கிலோ மீற்றர் என மூன்று பிரிவுகளாக இடம்பெற்றது.



5 கிலோ மீற்றர் போட்டியில் சிறுவர்கள், முதியவர்கள் கலந்து கொண்டனர். ஏனைய இரு பிரிவுகளிலும் பிரபல மரதன் ஓட்ட வீரர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

புளூ மௌன்டன் இருபதுக்கு-10 சம்பியன்ஸ் கிண்ணத் தொடர்:

# பாலமுனை அல் அறபா சம்பியன்





■ அஸ்ஹர் இப்றாஹிம்

புளூ மௌன்டன் சம்பியன் கிண்ண மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் பாலமுனை அல் அறபா விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

நிந்தவூர், மருதமுனை, பாலமுனை, அக்கரைப்பற்று, கல்முனை, இறக்காமம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 17 அணிகள் பங்குபற்றியிருந்த இத்தொடரில், நிந்தவூர் பொது விளையாட்டி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் நிந்தவூர் புளூ மௌன்டனை வென்றே அல் அறபா சம்பியனானது.

சம்பியனான அல் அறபாவுக்கு சம்பியன் கிண்ணமும், 25,000 ரூபாய் பணப் பரிசும் வழங்கப்பட்டது.

# கதலினா பதக்க கோல்ப் போட்டிகள் நிறைவு

விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்வின் வழிகாட்டலின் கீழ் ஈகிள் கோல்ப் கதலினா பதக்க கோல்ப் போட்டிகள் கொக்கல விமானப்படை கோல்ப் மைதானத்தில் சனிக்கிழமை(17) நிறைவடைந்தது.




இந்த போட்டித் தொடரில் 40 போட்டியாளர்கள் உயர்மட்ட விருதுகளுக்காக போட்டியிட்டனர். சிறந்த செயல் திறனுக்கான விருதுகளை ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் முறையே எயார் வைஸ் மார்ஷல் சுரேஷ் பெர்னாண்டோ மற்றும் பிரவீனா துனுவில ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

மொத்த புள்ளிகளின் அடிப்படையில் தொடரின் இரண்டாமிடத்தை பெண்கள் பிரிவில் மனோரி ஜெயக்கொடியும், ஆண்கள் பிரிவில் எயார் வைஸ் மார்ஷல் உதுல விஜேசிங்கவும் (ஓய்வு) பெற்றனர். மேலும், பெறப்பட்ட நிகர மதிப்பெண் அடிப்படையில் பிரவீனா துனுவில மற்றும் எயார் வைஸ் மார்ஷல் உதுல விஜேசிங்க (ஓய்வு) ஆகியோர் முறையே பெண்கள் மற்றும் ஆண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தைப் பிடித்தனர். பெண்கள் மற்றும் ஆண்கள் பிரிவுக்கான மொத்த புள்ளிகள் பிரிவில் பிரவீனா துனுவில மற்றும் விங் கமாண்டர் பிரபாத் விஜேகோன் ஆகியோர் வெற்றி பெற்றனர்.



ஆகஸ்ட் மாதத்திற்கான கௌரவமான ஈகிள்ஸ் கேடலினா மாதாந்த பதக்கம், மகளிர் பிரிவில் வெற்றியாளராக நிகர மதிப்பெண்ணைப் பெற்ற மனோரி ஜெயக்கொடிக்கு வழங்கப்பட்டது, ஆடவர் பிரிவில் எயார் கொமடோர் எரந்திக குணவர்தன ஆகஸ்ட் மாதத்திற்கான வெற்றியாளர் நிகர மதிப்பெண் மற்றும் ஈகிள்ஸ் கேடலினா மாதாந்திர பதக்கத்தை பெற்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 19 ஆகஸ்ட் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.